**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.59/2024**

**PW.1**

**Date: 18.08.2025**

| பெயர் | திரு. பொற்செழியன் | வயது | 39 |
|---|---|---|---|
| கணவர்/தந்தை பெயர் | பாபு ராஜேந்திரகுமார் | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **18st day of AUG 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி;</u>**

7. புகாரியில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த புகாரை நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எதிரி அந்த காரை ஒரு மெக்கானிக்கை அழைத்து வந்து பரிசோதித்து விட்டு விலைக்கு வாங்கிக் கொள்ளும்படி சொன்னதாக நான் புகாரியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனவே எதிரிக்கு என்னை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கம் இல்லை என்றால் சரியல்ல. நான் எத்தனை முறை மெக்கானிக்கை அழைத்துச் சென்றேன் என்றால் ஒரு முறை தான் அழைத்துச் சென்றேன். காரை என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய எவ்வளவு செலவாகும் என்று எதிரி என்னிடம் சொன்னார் என்றால் ரூபாய் ஒரு லட்சம் செலவாகும் என்று

சொன்னார்.

8. அந்த பணத்தை நான் எதிரிக்கு கொடுத்தேனா என்றால் இல்லை. ஏன் நான் அந்த தொகையை எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் அந்த கார் பஞ்சாப் பதிவெண் கொண்டது. அதனை ஒரு ஆண்டிற்கு தமிழ்நாட்டில் ஓட்டுவதற்கு எதிரி ஏற்பாடு செய்து கொடுப்பதாக என்னிடம் வாக்கு கொடுத்ததால் நான் பெயர் மாற்றம் செய்ய எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை. எதிரி அவ்வாறு சொன்னதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் வாய் சொல்லாகத்தான் அவ்வாறு சொன்னார். காருக்கு முன் பணம் எவ்வளவு கொடுத்தேன் என்றால் ரூபாய் 20000 கொடுத்தேன். 28/05/2023 அன்று அந்தத் தொகையை கொடுத்தேன்.

9. அந்த முன் பணம் கொடுத்ததற்கு எதிரி என்னிடம் ரசீது கொடுத்து கையொப்பம் பெற்றார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ரசீது அந்த ரசீது தான் என்றால் சரிதான். அதை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. அதை வேறு ஒருவர் மூலமாக படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் முன்பணம் கொடுத்தவுடன் தற்போது என்னிடம் காட்டப்பட்ட ரசீதை எதிரி என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி தான் அதை வைத்துள்ளார். அந்த காரின் பதிவு எண்ணையும் மாற்றி தருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. நான் 01/06/2023 அன்று காரை டெலிவரி எடுத்தேன். எவ்வளவு நாள் அந்த காரை ஓட்டினேன் என்றால் ஒரு வாரம் தான் ஓட்டினேன். நான் காரை கிரையம் வாங்கியவுடன் எதிரியின் நிறுவனத்தை பாராட்டி ஒரு வீடியோ பதிவு செய்து எதிரிக்கு வாட்ஸ் அப்பில் அனுப்பினேன் என்றாலும் அதில் நான் என்ன சொல்லி இருந்தேன் என்றால் எதிரி தான் அவ்வாறு பதிவு செய்து எனக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.அதனால் நான் அவ்வாறு பதிவு செய்தேன். ஆனால் நான் வீடியோவில் பதிவு செய்தபடி எதிரே நடந்து கொள்ளவில்லை. நான் காரை விலைக்கு வாங்கியவுடன் எத்தனை நாட்கள் கழித்து அந்த வீடியோவை எதிரிக்கு அனுப்பினேன் என்றால் அன்றைய தினமே அனுப்பினேன்.

11. நான் என்னுடைய நண்பர்களையும் எதிரியின் நிறுவனத்திற்கு கார் வாங்குவதற்காக பரிந்துரைத்து அழைத்துச் சென்றேன் என்றால் எதிரி என் காரை சரி செய்து தருவதாகவும் வாடிக்கையாளர் இருந்தால் அழைத்து வரும்படி கேட்டுக் கொண்டதால் நான் என் நண்பர்களை அழைத்துச் சென்றேன். கார் வாங்கிய எத்தனை நாட்களில் விபத்து ஏற்படுவது என்றால் இரண்டு நாட்களில் ஏற்பட்டது. இவ்வாறு அந்த விபத்து ஏற்பட்டது என்றால் ஒரு இருசக்கர வாகனம் காரில் உரசி விட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் காரின் முன் பக்க பம்பரின் இடது புறத்தில் உடைந்து காணப்படுகிறது என்றால் சரிதான். நான் சாட்சியம் அடித்தது போன்று இரு சக்கர வாகனம் உரசி இருந்தால் அவ்வாறு உடையதற்கு வாய்ப்பில்லை என்றாலும் நான் வேகமாக சென்று காரை மோதியதால் தான் அவ்வாறு உடைந்து உள்ளது என்றால் சரியல்ல.

12. நான் எப்போது புதுப்பித்தேன் என்றால் அன்றைய தினமே சரி செய்து விட்டேன். நான் சரி செய்ததற்கான ரசித்தேன் இடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த விபத்து குறித்தும் காரை சரி செய்த விவரம் குறித்தும் என்னுடைய புகாரியில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக வேண்டி தான் அந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ள காரில் பழுது ஏற்பட்டதாக சொல்வதும் கூட நான் ஏற்படுத்திய விபத்தின் காரணமாகத்தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு வீடியோ பதிவிட்ட பின்பு தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான்.

13. விபத்து ஏற்படுவதற்கு முன்பாக அந்த கார் நல்ல நிலையில் இருந்தது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் காரை டெலிவரி எடுத்த மூன்று நாட்களில் சத்தம் வரவே மீண்டும் நான் எதிரியை அணுகியபோது எதிரி காரை கொண்டு வரும்படி சொன்னதாக சாட்சியம் வைத்து உள்ளேன் என்றால் சரிதான். கார் எவ்வளவு மைலேஜ் கொடுத்தது என்றால் எனக்கு தெரியவில்லை. எதிரியிடம் ஒரு நாளைக்கு 2000 லிருந்து 4000 டீசல் போடவேண்டி உள்ளதாக நான் புகார் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் எப்போது காரை விற்றுவிடலாம் என்று முடிவு செய்தேன் என்றால் காரை சரி செய்து தரும்படி 1 மாதமாக கேட்டு வந்தேன். அவர்கள் சரிசெய்து தராததால் நான் விற்று விடலாம் என்று முடிவு செய்தேன்.

14. என் மனைவி கார் வேண்டாம் நகையை விட்டுக் கொடுங்கள் என்று

கேட்டதால்தான் நான் காரை விற்றுவிடலாம் என முடிவு செய்தேன் என்றால் சரிதான். 26/06/2023 அன்று திருவல்லிக்கேணியில் உள்ள எதிரியின் அலுவலகத்தில் வந்து காரை விற்று தரும்படி நான் கேட்டேனா என்றால் சரிதான். அந்த காரை youtube விளம்பரத்தில் 11 லட்சத்திற்கு விலைக்கு கொடுப்பதாக எதிரி விளம்பரம் செய்ததால் நான் காரை மீண்டும் திருப்பி கொடுக்கும்படி கேட்டேன் என்றால் சரியல்ல. காரை அதிக விலைக்கு இருக்கலாம் என்ற ஆசையில் தான் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் நான் எதிரிக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

15. நான் ஏன் புகார் கொடுத்தேன் என்றால் புகார் கொடுக்கவில்லை. ஷோ ரூமை காணவில்லை என்று தான் நான் வாய்வார்த்தையாக காவல் நிலையத்தில் சொன்னேன். நான் ஒரு மாதம் கழித்து 2 ஆம் எதிரியிடம் காரை விற்பனை செய்ய ஒப்பந்தம் செய்தேனா என்றால் செய்தேன். அந்த கார் விற்பனையாகாததுதான் பிரச்சனைக்கு காரணம் என்றால் சரிதான். அதன்பின் மூன்று மாதங்கள் கழித்து நான் என்னுடைய கூட்டாளிகளை அளித்து சென்று எதிரியை பணம் கேட்டு மிரட்டினோம் என்றாலும் அவர் பணம் கொடுக்கவில்லை என்றதால் நான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் எதிரியின் மீது புகார் கொடுத்தேன் என்றால் நான் மிரட்டவில்லை. புகார் மட்டும் தான் கொடுத்தேன்.

16. எத்தனை முறை புகார் கொடுத்தேன் என்றால் நான்கு முறை கொடுத்தேன். காவல் ஆய்வாளர் எதிரியிடம் கார் மற்றும் அதன் ஆவணங்களை என்னிடம் ஒப்படைக்கும்படி அறிவுறுத்தியதின் பேரில் எதிரி கார் மற்றும் ஆவணங்களை

கொண்டு வந்தார் என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் எதிரி கார் மற்றும் ஆவணங்களை கொண்டு வந்து கொடுத்து விட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அதை பார்க்கவும் இல்லை எடுக்கவும் இல்லை. நான் என்னுடைய முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய புகாரில் காவல் துணை கண்காணிப்பாளர் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாக குறிபிட்டதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதாக என்றால் இல்லை.

17. நான் குறிப்பிடட சில காலத்தில் 4 முறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் யாரோ என்னை தவறாக வழி நடத்தியதாக தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு நல்ல காரை விற்பனை செய்யவேண்டும் என்பதற்காக தான் ஒரு மெக்கானிக்கை அழைத்து வந்து சரிபார்த்துக்கொள்ளும்படி சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் முன்பணம் கொடுத்தவுடன் கார் குறித்த விவரங்களை எதிரி குறிப்பிட்டு எதிரி எனக்கு கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டதாலும் எரிபொருள் செலவு அதிகம் ஏற்பட்டதால் தான் நான் கார் மீது பயம் ஏற்பட்டு அதனை எதிரியிடம் ஒப்படைத்து வேண்டும் என்று நினைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

18. எதிரி யூடிப் விளம்பரத்தில் காரை ரூ.11 லட்சத்திற்கு விற்பதற்கு விளம்பரம் செய்ததால் அதிக விலைக்கு விற்பனை செய்ய நான் எதிரியிடம் காரை மீ்ண்டும கேட்டேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரை விசாரித்த கேளம்பாக்கம் காவல்

ஆய்வளார் தீபக்குமார் புகாரில் உண்மை இல்லை என்று தெரிந்து தான் அதன் மீது நடவடிக்கை எடுக்கவிர்லலை என்றால் சரியல்ல. அதன்பின்னர் நான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில்மீண்டும் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 26/03/2024 அன்று காவல் ஆய்வாளர் அழகம்மாள் எதிரியை கார் மற்றும் ஆவணங்களை என் வசம் ஒப்படைக்கும் படி சொன்னார் என்றாலும் நான் தான் அதை வாங்க மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. ஆனால் அதன்பின்னர் 28/03/2024 அன்று தாம்பரம் காவல் ஆணையரிடம் புதியதாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே அந்த புகார் விசாரிக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் அதை விசாரிக்க தேவையில்லை என்று அந்த புகாரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

19. ஆனால் நான் மீண்டும் 02/04/2024 அன்று காவல் ஆணையரிடம் மீண்டும் ஒரு புகார் கொடுத்தேன் என்றாலும் அந்த புகாரின் மீதும் விசாரணை தேவையில்லை என கருதி போலீசார் அதை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் தொடர்ச்சியாக எதிரின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வந்ததோடு அந்த புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தேன் என்றாலும் அவற்றை பார்க்கும்போது யாரோ என்னை தவறாக வழி நடத்தியதால்தான் நான் தொடர்ந்து புகார்கள் தாக்கல் செய்து வந்துள்ளேன் என்றாலும் எனவே இந்த வழக்கில் எவ்வித முகாந்திரமும் இல்லாததால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

S/d.K.Nilavarasan, 18.08.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.